**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 73/2021**

2023- ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11– ஆம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் ( 1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி ) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | தொழில் | : | சொந்த தொழில் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | சபாபதி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | பெரம்பலூர் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 56/2023 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை** :-

1) எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்துவிட்டு தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான் . நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் இரண்டு ஆவணங்கள் மட்டும் தாக்கல் செய்வதாக சொல்லியுள்ளேன் என்றாலும் ஆனால் மூன்று ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . மனுவில் குறிப்பிட்டுள்ளேன் ஆனால் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை . அவ்வாறு சொல்லாதது நீதிமன்ற நடைமுறையை தவறாக பயன்படுத்தியது என்றால் சரியல்ல.

2) எனது பெயரில் உள்ள 18.02.2008 ல் தாக்கல் செய்யப்பட்ட கிரய பத்திரம் எனது தரப்பு ஆவணம் ஒன்றாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . மேற்படி ஆவணம் சர்வே எண் . 111/1M மட்டுமே என்றால் சரிதான். நான் எனது வாக்குமூலத்தில் இதர நிலங்களையும் நான் வாங்கியதாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான் . இதர நிலங்கள் சம்மந்தமாக யார் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார்கள் , விற்பனை செய்துள்ளார்கள் என்ற விபரங்களை எனது கிரய முன்னவரை கேட்டால் தான் தெரியும் என்றால் சரிதான். என்னுடைய கிரய முன்னவருக்கு தெரிய கூடிய விசயங்களை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில்

சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான் . பி.வா.சா.ஆ.2 ஆன கணிணி வழி பட்டா சர்வே எண் . 111/1M க்குரியது எனது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . பட்டா மாற்றம் சம்மந்தமாக தாலுக்கா அலுவலகத்தில் மனு கொடுத்து மாற்றம் செய்தேனா என்றால் ஆமாம். மனு கொடுத்து தான் மாற்றம் செய்தேன் . அவ்வாறு மாற்றம் செய்ய கோரிய மனு ஏதேனும் இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் கொடுத்த மனுவின் பேரில் தாலுக்கா அலுவலகத்தில் யாரையாவது விசாரணை செய்தார்களா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) மனுவின் பேரில் என்னை மட்டும் தான் தாலுக்கா அலுவலகத்தில் விசாரணை செய்தார்களா என்றால் நான் மட்டும் விசாரணைக்கு சென்றிருந்தேன். வேறு யாரும் விசாரணைக்கு வரவில்லை .சர்வே எண். 111/1M நான் கிரயம் பெறுவதற்கு முன்பு வண்டிபாதையாக இருந்து வந்தது. அதற்குண்டான ஆதரவுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் கிரயம் பெறுவதற்கு முன் உள்ள ஆவணங்களை எதையும் தாக்கல் செய்யவில்லை . இந்த வழக்கில் வாதி தரப்பில் குன்னம் வட்டாட்சியரை வா .சா.3 ஆக இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் கேள்விபட்டேன் . அவருடைய சாட்சியத்தில் சர்வே எண் . 111/1M என்பது நிலவியல் நடைபாதையாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அது தவறு . வண்டிபாதையாக தான் இருந்தது. நான் சொல்வது தவறு என்றாலும் சர்வே எண். 111/1M என்பது நிலவியல் பாதையாக தான் தற்போது வரை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

4) வா.சா.ஆ.3 தனது சாட்சியத்தில் நிலவியல் பாதையை பொதுவாக தான் அனுபவிக்க முடியும் யாரும் உரிமை கோர முடியாது என்று குறிப்பிட்டுள்ள விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் நாங்கள் அனைவரும் அதை பொதுபாதையாக பயன்படுத்தி வருகிறோம் . வா.சா.3 தனது சாட்சியத்தில் வண்டி பாதை தொடர்பாக யாரும் தனது பெயரில் தனி பட்டா பெற முடியாது என்று சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

DMK Kumanam

5) வா.சா.3 தனது சாட்சியத்தில் சர்வே எண் . 111/1M–க்கு பட்டா வழங்க முடியாது என சொல்லியுள்ள நிலையில் மேற்படி அதே சர்வே நம்பருக்கு எனது பெயரில் பட்டா இருந்ததை நான் தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரிதான் . நான் கொடுத்த மனுவின் பேரில் சரியாக விசாரணை செய்யாமல் எனது பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது தவறு என்று சொன்னால் சரியல்ல . பி.வா.சா.ஆ.3 எனது தரப்பில் எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை பற்றி சொல்வதற்காக தாக்கல் செய்யப்பட்டது.

6) பி.வா.சா.ஆ 3 ஆனது பாதை சம்மந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விபரத்தை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான் . சர்வே எண் . 111/1M –ல் எனக்கு கிரயம் செய்துக் கொடுத்த கிரய முன்னவருக்கே கிரயம் செய்து கொடுக்க உரிமையில்லை என்றாலும் மோசடி ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி கிரயம் நடைபெற்றுள்ளது என்று சொன்னால் சரியல்ல . தாவா சொத்திற்குரிய மூலாதார ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கு போடும் போது எதிர்வழக்குரையுடன் கொடுத்திருப்பேன் . இந்த விபரங்களையும் நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7) எனக்கு கிரயம் கொடுத்தது தொடர்பாக எனது கிரய முன்னவரை தான் விசாரிக்க வேண்டுமென்றால் சரிதான் . நான் எனது கிரய முன்னவரை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் . என்னுடைய கிரய முன்னவர் சர்வே எண் 111/1M தொடர்பாக கிரயம் செய்து கொடுக்க எந்த உரிமையும் கிடையாது என்றாலும் உரிமை இருப்பது போல் மோசடியாக கிரயம் செய்துக் கொடுத்துள்ளார் என்றாலும் அதனால் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து தொடர்பாக வருவாய்துறை ஆவணங்களில் நிலவியல் பாதை என்று தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

8) மேற்படி நிலவியல் பாதையை எந்த ஒரு தனி நபரும் சொந்தம் கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. பட்டாவும் பெற முடியாது என்று சொன்னால் சரியல்ல . எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.2 ஆனது எந்தவிதமான விசாரணையுமின்றி எனது பெயருக்கு

DMuthukumaran

தவறான வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல . மேற்படி பட்டாவின் அடிப்படையில் தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCum JM Court, Kunnam